



# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண்.15

## சுற்றுச்சூழல்

அறிவிப்புகள்

2020–2021

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண்.15

# சுற்றுச்சூழல்

# அறிவிப்புகள்
# 2020–2021

**K.C. கருப்பணன்**

சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2020

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
## 2020–2021 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்
## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. தமிழ்நாட்டின் 15 மாநகராட்சிகளுக்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த மாநகராட்சி ஒன்றுக்கு ரூ. 8.00 இலட்சம் செலவில் தயாரித்தல்.

மாநிலத்தின் சுற்றுச்சூழலை மேம்படுத்த ஒரு செயல் திட்டத்தினை உருவாக்குவதற்கு ஏதுவாக, தமிழகத்தில் உள்ள 15 மாநகராட்சிகளிலும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை புகழ்பெற்ற அமைப்புகள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமாக தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2020–2021 முதல் 2022–2023 வரையிலான காலப்பகுதியில் 15 மாநகராட்சிகளுக்கான திட்டங்கள், ஆண்டுக்கு ஐந்து மாநகராட்சிகள் என்ற விகிதத்தில், மாநகராட்சி ஒன்றுக்கு ரூ.8.00 இலட்சம் செலவில் 15 மாநகராட்சிகளுக்கு மொத்தம் ரூ.120.00 இலட்சம் செலவில் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும்.

## 2. தமிழ்நாடு, மாவட்டவாரியாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டத்தை உருவாக்குதல்.

மாநிலத்தின் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை சிறந்த முறையில் மேலாண்மை செய்ய ஏதுவாக, தமிழ்நாட்டின் நிலப்பரப்பு, மண்வளம், மழைப்பொழிவு, நீர்பாசன முறை, பயிரிடுதல், சுற்றுச்சூழல் மற்றும் சமூகப்பண்புகள் அடிப்படையில் ஏழு வேளாண் காலநிலை மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சுற்றுச்சூழல் துறை, அறிஞர் அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பருவநிலை ஸ்டுடியோவுடன் இணைந்து, வேளாண் மண்டலம் வாரியாக, காலநிலை மீள்வளர்ச்சி திட்டத்தை **ரூ.332.82** இலட்சம் மதிப்பீட்டில் **37** மாவட்டங்களில் தயாரிக்கப்படும். இத்திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். நடப்பு **2020–21** ஆம் ஆண்டில் **ரூ.110.94** இலட்சம் செலவில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 3. கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள சின்ன ஏரியினை சூழல் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

நீர்நிலைகளில் சூழல் மீள்கொணர்வு பணிகள் போன்ற பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்துவதால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேலாண்மை தனித்துவம் பெறுகிறது.

கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள சின்ன ஏரியினை 2020–2021 ஆம் ஆண்டில் சூழல் மீள்கொணர்வு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.336.00 இலட்சம் செலவில் ஏரிக் கரையை வலுப்படுத்தியும், தோட்டங்கள் போன்றவை அமைத்தும் சின்ன ஏரி புனரமைக்கப்படும்.

## 4. வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம் 37 மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 1.20 இலட்சம் செலவில் பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

மாநிலத்தின் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அறிவினை வளர்க்கவும் அது தொடர்பான திறனை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கில், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானதாகும்.

2013–2014 ஆம் ஆண்டு முதல் 2019–2020 வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகளைக் கொண்டு நாட்டுப்புறபாடல், தெருக்கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு மற்றும் பாரம்பரிய நடனம் ஆகியவைகளுடன் வாகனங்கள் மூலமாக பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

**இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மேற்கண்ட திட்டம், மாவட்டத்திற்கு ரூ.1.20 இலட்சம் செலவில், மாவட்டம் ஒன்றுக்கு 20 இடங்கள் வீதம், 37 மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.44.40 இலட்சம் செலவில், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

**5. தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல ரூ.1.50 இலட்சம் செலவில் 37 மாவட்டங்களில் செயல்படுத்துதல்.**

மாநிலத்தின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தகவல் தொடர்பான நிலையான அபிவிருத்தி மூலம் சுற்றுச்சூழல் அறிவினை வளர்க்கவும் மற்றும் அது தொடர்பான திறனை மேம்பாடு அடையச் செய்வதை குறிக்கோளாக கொண்டுள்ளது.

இதன்படி, பள்ளி மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை பரப்பும் விதமாக, தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்ற மாணாக்கர்களுக்கு வினாடி–வினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்கு கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் நடத்தப்படும். **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மேற்கண்ட நடவடிக்கைகள் மாவட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 37 மாவட்டங்களில் ரூ.55.50 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**6. தேசிய பசுமைப்படை, சூழல் மன்ற மாணாக்கர்கள் மற்றும் பொது மக்களுக்கு பல்லுயிர் பாதுகாப்பு, மாசினை தடுத்தல் போன்றவை குறித்த கருத்தரங்கங்கள், கருத்துப்பட்டறைகள் ரூ.100 இலட்சம் செலவில் நடத்துதல்.**

சரியான பயிற்சிக்குரிய வழிமுறைகளை உயர்த்துவதன் மூலம் சுற்றுச்சூழலை சரிசெய்வதற்கான நிலைபாட்டை கருத்தில் கொண்டு அவற்றில் வெற்றி பெறும் வகையில், பயிற்சி கருத்துப்பட்டறை, பிரச்சாரம் ஆகியவற்றின் மூலம், மாநிலத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், அரசுசாரா நிறுவனங்கள், வல்லுநர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியவர்களைக் கொண்ட தொடர் அமைப்பை உருவாக்குவது இத்துறையின் நோக்கமாகும். மாசினை தடுத்தல், சூழல் அமைப்பைப் பாதுகாத்தல், நெகிழியின் ஆபத்து குறித்து விளக்குதல் காலநிலை மாற்றத்தினை ஏற்கும் உத்திகள் ஆகிய குறிப்பிடத்தக்க விழிப்புணர்வு நிகழ்வுகளை இந்நடவடிக்கைகளால் மேம்படுத்த இயலும். **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

**7. தோல் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள திருப்பத்தூர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களின் வழியாக செல்லும் பாலாற்றின் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பறக்கும் படை ரூ.50.00 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இரண்டு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களை வேலூர் மற்றும் வாணியம்பாடியில் நிறுவியுள்ளது. இப்பகுதியில் 426 உறுப்பினர்களை கொண்ட தோல் தொழிற்சாலைகளுக்காக 8 பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றும் (ZLD) அமைப்புடன் கூடிய பொது சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) அமைத்தும், 80 தோல் தொழிற்சாலைகள் தனித்தனியே பூஜ்ஜிய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தும் மற்றும் தோல் தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய 80 இன்னபிற தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

இத்தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை பாலாறு நதி படுகையில் சுத்திகரிக்காமல், இரகசியமாக வெளியேற்றுவதாகவும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து

வெளியேற்றப்படும் திடக்கழிவுகள் நிலம் மற்றும் நீர் நிலைகளில் கொட்டப்படுவதாகவும், பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது புகார் மனுக்கள் வாரியத்தால் பெறப்படுகின்றன. **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** திருப்பத்தூர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிப்பு செய்து பாலாற்றின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஒரு பறக்கும் படை 2020–2021 ஆம் நிதியாண்டில் ரூ.50.00 லட்சம் செலவில் ஏற்படுத்தப்படும். இந்த பறக்கும் படை வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு சுற்றுச்சூழல் பொறியாளர், ஒரு உதவிப் பொறியாளரை கொண்டு இயங்கும். இதற்கான பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

## 8. திரவ மற்றும் திடக்கழிவு மேலாண்மையில் சிறப்பாக செயலாற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டு தோறும் ரூ.1.00 லட்சம் மதிப்பில் பசுமை விருதுகள் வழங்குதல்.

தமிழ்நாட்டில் மொத்தம் 15 மாநகராட்சிகளும் 121 நகராட்சிகளும் மற்றும் 528 பேரூராட்சிகளும் உள்ளன. இவற்றிலிருந்து நாளொன்றுக்கு 13,968 டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 12,850 டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு, அதில் 7,196 டன் திடக்கழிவுகள் செயல்முறைபடுத்தியும், 5,654 டன் திடக்கழிவுகள் குப்பை கிடங்குகளில் கொட்டப்பட்டும் வருகின்றன.

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி சிறப்புற திடக்கழிவு மேலாண்மையை கையாண்டு, கழிவுகளை உற்பத்தி ஆதாரத்திலேயே தரம் பிரித்தல், மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துதல், கழிவிலிருந்து உரம் தயாரித்தல், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்களுக்கான தடையை, சிறப்புற செயலாற்றுதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி, திறம்பட இயக்கும்

உள்ளாட்சி அமைப்புகளுக்கு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு மாநகராட்சி, மூன்று நகராட்சிகள் மற்றும் ஐந்து பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றிற்கு மொத்தம் ரூ.1.00 இலட்சம் மதிப்பிலான பசுமை விருதுகள் 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் வாரிய நிதியிலிருந்து வழங்கப்படும்.

## 9. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் சிறப்பாக களப்பணியாற்றும் ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வகம் தேர்வு செய்யப்பட்டு பசுமை விருது வழங்குதல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நெகிழி (பிளாஸ்டிக்) மாசில்லா தமிழகத்தினை உருவாக்கும் பொருட்டு, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை பயன்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட அளவில் வாரிய பணியாளர்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு உறுதுணையாக வாரியத்தின் சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் நீர், கழிவுநீர் மற்றும் காற்று மாதிரிகளை உடனுக்குடன் ஆய்வு செய்வதோடு, காற்றின் தரத்தை தொடர்ந்து கண்காணித்து ஆய்வின் முடிவுகளை அறிவித்து சிறப்பாகச் செயல்படுகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாக பணியாற்றும் மாவட்ட ஆட்சியர்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு நலச்சங்கங்களுக்கு வாரியம் ஆண்டுதோறும் பசுமை விருது வழங்கி ஊக்குவித்து வருகின்றது. அதேபோன்று **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வாரியத்தில் சிறப்பாக களப்பணி ஆற்றும் ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வகம் தேர்வு செய்யப்பட்டு ஆண்டுதோறும் பசுமை விருது **2020–2021** ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும்.

**10. பள்ளி மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்குதல்.**

பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, நெகிழி (பிளாஸ்டிக்) கழிவு மேலாண்மை மற்றும் இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் 2018–2019 ஆம் நிதியாண்டில் 200 பள்ளிகளுக்கும் மற்றும் 2019–2020 ஆம் நிதியாண்டில் 300 பள்ளிகளுக்கும் ஆக மொத்தம் 500 பள்ளிகளுக்கு திரவ படிக காட்சிபடுத்தும் கருவிகள் வழங்கப்பட்டது. **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2020–2021 ஆம் நிதியாண்டில் 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவிகள் வழங்கப்படும்.

**11. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் சுற்றுப்புற காற்றின் தன்மையை கண்காணிக்கும் திறனை அதிகப்படுத்த மாநிலத்தில் மேலும் ஒரு நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு ஆய்வகம் ரூ.2.5 கோடி செலவில் சேலம் மாவட்டத்தில் நிறுவுதல்.**

தமிழ்நாட்டில் மொத்தம் 8 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும், 8 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும், சென்னையில் ஒரு நடமாடும் காற்று மாசு ஆய்வகமும் இயங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் சுற்றுப்புற காற்றின் தன்மையை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஒரு நடமாடும் (Mobile) தொடர் காற்று தர கண்காணிக்கும் ஆய்வகம் 2020–2021 ஆம் நிதியாண்டில் ரூ.2.5 கோடி செலவில் நிறுவப்படும்.

இந்த நடமாடும் ஆய்வகம் சேலம் மாவட்டம் மற்றும் அவற்றின் அருகிலுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள காற்றை மாசுபடுத்தக்கூடிய தொழிற்சாலை பகுதிகளுக்கு விரைந்து சென்று காற்றின் தரத்தை கண்காணிக்கக்கூடியதாக இருக்கும். விழிப்புணர்வு மற்றும் புகார்களை பதிவு செய்யும் பணிகளுக்கும், தீபாவளி மற்றும் போகி போன்ற பண்டிகை தினங்களில் காற்றின் தரத்தை அறிய பயனுள்ளதாகவும் இருக்கும். தொழிற்சாலைகளுக்கு எதிரான பொதுமக்களின் புகார்களின் பேரில் காற்றின் தரத்தை அறிந்து துரித மேல் நடவடிக்கை எடுக்க பயனுள்ளதாக இருக்கும்.

12. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் உலகத்தரம் வாய்ந்த சிறந்த தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ரூ.2.00 கோடி செலவில் பயிற்சி வழங்கப்படும்.

மாநிலத்தின் மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பாக செயலாற்றி வருகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் பெறுவதற்கு வாரியம் பல்வேறு திட்டங்களை தீட்டி செயலாக்கி வருகின்றது. ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி என்பது அந்நிறுவனத்தில் பணியாற்றும் திறமையான மனிதவளத்தின் அடிப்படையில் அமையும். அதன்படி மனிதவள மேம்பாட்டிற்கு பயிற்சி மிகவும் அவசியமானதாகும்.

சமீப காலங்களில் நீர், நிலம் மற்றும் காற்று மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் உலக அளவில் புதிய தூய்மை தொழில்நுட்பங்கள் செயல் வடிவம் பெற்றுள்ளன. அதே போன்று மாசு காரணிகள் அளவிடுதல், சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைக் கொண்டு எதிர்கால போக்கினை முன்னறிவித்தல் (Forecasting) போன்றவற்றில் புதிய மென்பொருட்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

இத்தகைய புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு செயலாக்கம் செய்யும் வகையில் வாரியத்தில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் வெளிநாடுகளில் நடத்தப்படும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளவும், அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் / அமைப்புகளில் பயிற்சி மேற்கொள்ளவும் அனுப்பி வைக்கப்படுவர். இப்பயிற்சி 2020–2021 நிதியாண்டிலிருந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** ஆண்டுதோறும் பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் மொத்தம் ஐந்து பேருக்கு 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய மூன்று ஆண்டுகளில் 15 பேருக்கு பயிற்சி அளிக்கப்படும். மேலும், 2020–2021 ஆம் நிதியாண்டில் பணியில் அமர்த்தப்படும் உதவிப் பொறியாளர்கள், விஞ்ஞானிகளுக்கு சுற்றுச்சூழல் சட்டங்கள், தொழிற்சாலைகள் ஆய்வு செய்தல், மாதிரிகள் சேகரிப்பு செய்தல் மற்றும் வாரிய செயல்பாடுகள் குறித்து உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி வகுப்புகள் மொத்தம் ரூ.2.00 கோடி செலவில் அளிக்கப்படும்.

**K.C. கருப்பணன்**

சுற்றுச்சூழல் துறை அமைச்சர்


பிளாஸ்டிக் மாசில்லா
தமிழ்நாடு